செ.வெ.எண்: 03 நாள்: 01.03.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 386850 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 12வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.03.2017) நடைபெற்றது.

இந்த 12வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

தமிழகஅரசு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை முற்றிலுமாக தடுக்கும் வகையில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராமத்தில் 12வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் இம்முகாம் இன்று (01.03.2017) முதல் 21.03.2017 வரை 21 நாட்கள் நடைபெறவுள்ளது. நமது மாவட்டத்திலுள்ள 386850 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது. இத்தடுப்பூசி பணியினை 59 மருத்துவக்குழுக்கள் ஈடுபடவுள்ளதுடன், கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளது. 13 ஊராட்சி ஒன்றியங்களில் 11 இடங்களில் தடுப்பூசி மருந்துகள் சேமித்து வைக்கப்பட்டு கால்நடைகளுக்கு போடப்படவுள்ளது.

மேலும் பசுக்கள் சினைப்பிடிக்கும் தன்மையை அதிகரிக்கவும், பால் உற்பத்தியை பெருக்கவும் கால்நடை வளர்ப்பவர்களுக்கு தாது உப்பு கலவையும் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதி பொதுமக்களின் சாலை வசதி, கால்நடை மருத்துவமனை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே அனைத்து கால்நடை வளர்ப்பவர்களும் கோமாரி நோய் தடுப்பூசியினை தவறாமல் தங்களது கால்நடைகளுக்கு போட்டு கோமாரி நோய் வராமல் காக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இம்முகாமில் கால்நடை இணை இயக்குநர் மரு.சதாசிவன், உதவி இயக்குநர்கள் (நோய் புலனாய்வு) மரு.சுப்பையன்செட்டியார், மரு.கலையரசி (அறந்தாங்கி), பிரதம மருத்துவர் மரு.ரவிச்சந்திரன், உதவி மருத்துவர் மரு.ராஜேஸ்வரி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**